20th July 1957]

SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, சாமராஜநகர் சத்தியமங்கலம் இடையே உள்ள பகுதி மலைபிரதேசமானது. தாளவாடி பிர்காவிலே மிகவும் பிற்போக்கான மக்கள் இருக்கிறார்கள். அங்கு போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மத்திய சர்க்கார், மிக வும் பிற்போக்கான பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொல்வதினாலும், இந்த பிற்போக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதனாலும், உடனடியாக இந்த ரெயில்வே லைனை எடுத்து வேலை ஆரம்பிக்கவேண்டும் என்று நமது சர்க்கார் கண்டிப்பாக, குறிப்பாக மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிய ரெயில்வே லைனை எடுத்துக் கொள்வதற்கு பூர்வாங்கமாக அதை எவ்வாறு அமைப்பது, எத்தகைய பலன் கிடைக்கும் என்று சர்வே செய்ய வேண்டும். இந்த லைனைப் பொறுத்த வரை சர்வே செய்வது என்று முடிவு செய்திருக்கின்றனர். இதை விட அதிகமாக இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI M. D. RAMASAMI : விருதுநகர் - மானாமதுரை ரெயில்வே லைன சர்வே செய்வதற்கு இந்த வருஷத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; அதுவும் முக்கியமான ஒரு லைன். எடுத்துக்கொள்ளவேண்டும், என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கின்றோம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்வதற்கில்லை.

SRI A. VEDARATHNAM PILLAI : நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் வேறு எந்த எந்த லைன்களை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது, எந்த எந்த லைன்களை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நமது அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது என்பதை அறிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த எந்த லைன்களை எடுத்து நடத்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி தனியாக ஒரு கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

17 லைன்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது. முக்கியமாக 6 லைன்களை அவசரமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சமீபத்தில் வற்புறுத்தியிருக்கிறது. எந்த லைனை மத்திய அரசாங்கம் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளும் என்று சொல்வதற்கில்லை. பொருள் வசதி அதிகம் கிடைத்தால் ஏதாவது சிலவற்றை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று தெரிகிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் புதிய ரெயில்வே லைனை போடுகிறபோது ஒரு வட்டத்தில் தேவையை அறிந்து செய்கிறது என்பது ஓரளவு உண்மையானால், தென் நாட்டில் நம்முடைய சென்னை மாகாணத்தில் புதிய லைன்களை ஏற்று போடுவதற்குமிகவும் காலதாமதமாகிறது என்பதை சர்க்கார் கருதுகிறதா ? அப்படி காலதாமதம் ஏற்படும்போழுது இதர மாகாணங்களில் எத்தனை மைல் நீளம் ரெயில்வே லைன் போடப்படுகின்றதோ அத்தனை மைல் நீளம் நம் மாகாணத்திலும்போட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்திக் கேட்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் ராஜ்யத்தில் பல லைன்களைப் போடவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. சமீபத்தில் எல்லா ராஜ்ய முதல் அமைச்சர்களும் சேர்ந்து டில்லியில் நடந்த ஒரு மகா நாட்டில் ஒவ்வொரு ராஜ்யமும் அவரவர் இடங்களில் ரெயில்வே லைன் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். எந்த ராஜ்யத்திலும் புதிய ரெயில்வே லைனை இந்த ஆண்டில் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளப்போவது இல்லை.

[20th July 1957

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிவரை போக்கு வரத்து சாதனம் சரியாக இல்லாதபடியால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு பிரயோசனப்படும்படியாக திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி வரை ரெயில்வே லைன் போடுவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றியும் அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சென்னை கடற்கரைப் பகுதியிலே திருவொற்றியூரிலிருந்து தெற்கே மற்றப் பகுதிகளை இணைத்து மின்சார ரயில் போடுவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை

SRI P. S. K. LAKSIMPATHI RAJ : தென் இந்தியாவிலேயே, எழும்பூருக்கு அடுத்தபடி, பிரயாணிகள் அதிகமாக வந்து போகின்ற இடம் பழனி ஸ்டேஷன் ஆகும் எனவே பழனி திருப்பூர் ரெயில் லைன் அமைக்க சர்க்காருக்கு ஏதாவது குறி இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு போட்டால் நலம் தான். ஆனால் சமீபத்தில் அது போடப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

SRI S. RAMALINGA PADAYACHI : சார், அரியலூரிலிருந்து சேலத்திற்கு ரயில் இணைப்பு போட வேண்டும் என்று ஜில்லா போர்டு ஒரு தீர்மானம் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியது. அதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் ஜில்லாவைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் தனிக் கேள்வியாகக் கேட்கலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் முக்கியமான இடங்களில் ரெயில் பாதை போடுவது அவசியம்தான். ஆனால் நான் முன்பு சொன்னபடி இவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

[a]

Cancer centres

* 159 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of cancer centres existing at present in the State; and

(b) whether there is any proposal to open new cancer centres during 1957–58?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Two. The Barnard Institute of Radiology, Government General Hospital, Madras, in collaboration with the Government Hospital for Women and Children, Madras, forms one centre for treatment of cancer cases. The other is a private Cancer Institute at Adyar.

(b) None at present.

Photo Film Manufacturing Factory

* 160 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given on 10th

---

[a] Expunged on a motion adopted by the House—vide page 27 infra.